# 9

## நாமகரணமற்ற கிறிஸ்தவம்:

# பாவமன்னிப்பு

சில நல்ல இருதயங்கள், ஞானஸ்நானத்தைப் பற்றிய ஆவியானவரின் தெளிவான போதனையை ஏற்றுக் கொள்ளத் தவறியிருக்கின்றன, ஏனென்றால் அது ஞானஸ்நானத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது மற்றும் அதன் விளைவாக கிறிஸ்துவின் இரத்தத்தினுடைய வல்லமை யானது குறைவாக மதிப்பிடப்படுகின்றது என்று அவர்கள் பயப்பட்டனர்.

தேவனுடைய இருபொருளற்ற போதனையின் விளைவுகள் அல்லது முடிவுகள் பற்றி நியாயந்தீர்க்கக் கூடிய நிலையில் மனிதர்களாகிய நாம் இருப்பதில்லை. இருந்த போதிலும், ஞானஸ்நானம் பற்றிய ஆவியானவரின் போதனையை அனுமதிப்பதானது சுத்திகரிக்கும் இரத்தத்தினுடைய வல்லமையை எவ்வகையிலும் விலக்காதபடி அதன் இயல்பான மற்றும் தெளிவான அர்த்தத்தைக் கொண்டிருக்கும் என்பதில் நாம் உறுதியாயிருக்க லாம். இரத்தத்தின் மீதுள்ள விசுவாசத்தைத் தரவழைப்பதால் மட்டுமே எல்லாக் கீழ்படிதலும் - உண்மையில் கீழ்ப்படிதல் என்பதே - ஏற்றுக் கொள்ளப்பட முடியும். “கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே’’ (ரோமர் 3:26), ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தின் சுத்திகரிக்கும் வல்லமையின் மீது சாய்ந்து அதை நோக்குவதினாலேயே, ஒருவர் தேவனுக்குக் கீழ்ப்படியலாம் - மற்றும் இவ்வகையினால் மட்டுமே ஒருவர் உண்மையில் கீழ்ப்படியலாம். எந்தக் கீழ்ப்படிதலும் தன்னிலே தானே இரட்சிப்பதில்லை.

ஞானஸ்நானத்தைப் போலவே விசுவாசமும் தன்னிலேயே இரட்சிப் பதற்கு வல்லமையற்றதாக உள்ளது. அது போலவே இரத்தம் இல்லை யென்றால், ஆசீர்வாதத்திற்கான முயற்சி வீணானதாகவே உள்ளது. நமது கர்த்தருடைய மகிமையுள்ள ஆனால் அவமானமான மரணத்தினாலேயே விசுவாசம் வல்லமையுள்ளதாக்கப்படுகின்றது.

கிறிஸ்துவின் மரணமே தேவன் பாவிகளை இரட்சிப்பதைச் சாத்திய முள்ளதாக்குகின்றது. தேவன் பொய்யுரைப்பவராய் இருக்க முடியாது என்பது போலவே அவர் அநீதியுள்ளவராகவும் இருக்க முடியாது. ஆகையால் தேவன் கிறிஸ்துவை “தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி … கிருபாதார பலியாக அவரையே’’ (ரோமர் 3:25, 26) ஏற்படுத்தினார். உண்மையில், இயேசுவைச் சிலுவையில் மரிக்கும்படி தேவன் அனுமதித்த பொழுது, அவர் வேறு எவ்வகையிலும் திறக்க முடியாதிருந்த இரக்கத்தின் கதவைத் திறந்தார். ஆயிரக்கணக்கானவர்கள் மீது அவர் அன்பிரக்கம்

கொண்டவராயிருந்து, அவரது எல்லையற்ற இருதயமானது இரக்கத்தினால் நிறைந்திருந்தது; ஆனால் அதை அவர் பாவிகளிடத்திற்கு நீட்டிக்கவும் அதே வேளையில் நீதியுள்ளவராயிருக்கவும் முடியாதிருந்தது. எனவே இயேசுவின் மரணமானது தேவன் பாவிகளை இரட்சிக்கச் சாத்தியமுள்ள வழியாயிற்று. இந்த இரத்தம் இல்லாமல் பாவிகளுக்கு இரட்சிப்பளிக்கக் கூடிய நிபந்தனை எதையும் முழுமையாய்ச் சிந்திக்கவே முடியாது. கிறிஸ்துவின் இரத்தம் இல்லாமல் ஒருவர் மனித இருதயத்திற்குச் சாத்தியமான மறைமுக வழிகள் யாவற்றிலும் விசுவாசிக்க முடியும், மற்றும் அப்பொழுதும் கூட சர்வ வல்லவர் அந்த நபரை இரட்சிக்க முடியாது. இல்லையென்றால், தேவன் தமது சொந்தப் பிள்ளையின் இரத்தத்தை, அந்தப் பிள்ளை பிதாவினிடத்தில் கூடுமானால் தமது இரத்தத்தைச் செலவிடாதிருக்கும்படி வலிவுடன் தமது ஆத்துமாவில் வேண்டுதல் செய்தபொழுது, அந்த இரத்தத்தைப் பயன்படுத்தியதில் வீணாக அதைச் செலவிட்டவராகவே இருப்பார். இல்லை, இல்லை, என் அன்பார்ந்தவர்களே, பாவிகளை இரட்சிக்க தேவன் தம்மால் இயன்ற முழுமையான அவசியமான விலையைத் தவிர வேறு அதிகமானதொன்றையும் செலவிடவில்லை.

இன்னமும் நாம், மக்களுக்கு விசுவாசம் இரட்சிக்கின்றது, மனந் திரும்பாவிட்டால் கெட்டுப் போவீர்கள் என்று போதிக்கின்ற பொழுது தேவன் இட்ட இந்தக் கடுமையான செலவைக் குறைத்து மதிப்பிடுவ தில்லை. ரோமர் 10:9ல் பவுல், “… கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப் படுவாய்” என்று கூறிய போது நமது கர்த்தருடைய வெற்றிகரமான மரணத்தை அவர் குறைவாக மதிப்பிட்டாரா? ஞானஸ்நானம் பற்றிய தெளிவான போதனையானது இயேசுவின் தகுதிவாய்ந்த மரணத்தை விட்டு விலக்குவதாயுள்ளது என்று பயப்படுகின்ற எவரொருவரும் பவுலின் இந்தப் போதனையிலிருந்து ஒருக்காலும் விலகி ஓடியதில்லையே. இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கையிடுதல் இரட்சிப்புக்கான ஒரு நிபந்தனையாக அப்போஸ்தலரால் விதிக்கப்பட்டது. எல்லா நன்மையும் உண்மையும் நிறைந்துள்ள ஒரு நாமத்தில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஒருவர் வாயினால் அறிக்கையிடும் பொழுது இரட்சிப்பு எவ்விதம் வர முடியும்? அந்தச் செயலில் அந்நபரை இரட்சிக்கக் கூடியது எதுவுமே இல்லை. அப்படி இருந்தால், இருமுறை அல்லது மும்முறை அறிக்கை யிடுதல் என்பது இன்னும் அதிகமாய் உதவக் கூடுமே.

பின்வரும் விவரிப்பைப் பற்றிக் கருதுங்கள். ஒரு பயிரை விவசாயம் செய்யும் நிலைமைகளே அப்பயிர் சார்ந்துள்ள நிலமைகளாய் உள்ளன; அது அப்பயிருக்குக் காரணமாகின்றது, மற்றும் ஒரு சிறிய விவசாயமானது ஒரு சிறிய விளைவையே உண்டாக்குகின்றது. அதிக விவசாயமானது அதிக விளைவுக்குக் காரணமாகின்றது. அதிகம் முழுமையாக, அல்லது அதிகம் அறிவியல் பூர்வமாக ஒருவர் ஒரு பயிரை விவசாயம் செய்யும் பொழுது அது மேன்மையான விளைவை உணாடக்கும். பயிரை விவசாயம் செய்தல் என்பது அதற்கு நேரடியாக உதவுகின்றது. இயேசுவைக் கர்த்தர் என்று

*அறிக்கையிடுதல் பாவியை இரட்சிக்க உதவுகின்றது, ஆனால் அது விளைவுக்கு விவசாயம் உதவுகின்றது போலிருப்பதில்லை. அது இரட்சிப்புக்கு எவ்விதத்தில் உதவுகின்றது? அறிக்கையிடுதல் என்பது தனது வல்லமையை இரத்தத் திடமிருந்து கடன் பெறுகின்றதால் மட்டுமே முற்றாக உதவ முடிகின்றது; வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அது ஆத்துமாவை இரத்தத்துடன் இணைக்க அல்லது இரத்தத்துடன் தொடர்பு கொள்ள உதவுகின்றது.*

*ஆகையால், பேதுரு "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச் சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (1 பேது. 3:21) என்று கூறிய பொழுது, அவர் தமது கர்த்தருடைய இரத்தத்தைக் குறைத்து மதிப்பிடவில்லை. மாறாக, அதன் இரட்சிக்கும் வல்லமையை அவர் உயர்த் தினார். விசுவாசம், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ் நானம் - இவைகள் உண்மையிலே இரட்சிப்பதற்கு வல்லமையற்றவை களாயிருப்பினும் - இரத்தத்துடன் இவைகள் கொண்டுள்ள தொடர்பின் மூலமாக இரட்சிக்கும் வல்லமை கொண்டுள்ளன என்று அறிவித்தலானது இரத்தத்திற்கு வல்லமையைக் குறிப்பிடுவதாக உள்ளது. இந்த எளிய செய்கைகள் இரத்தக் கறையுடையவைகளாய் இருப்பதினாலேயே எளிய பயனளிக்கக் கூடியவையாக, முற்றானவைகளாக, தேவனுக்குக் கீழ்ப் படியும் செய்கைகளாக உள்ளன. அந்த இரத்தமானது ஒரு வெள்ளாட்டினு டைய இரத்தம் அல்ல ஆனால் அது நமது கர்த்தருடைய இரத்தமாய் உள்ளது. நிச்சயமாகவே, அந்த வல்லமையை அறிவிப்பதென்பது, கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறைத்து மதிப்பிடுவதல்ல. இந்த இரத்தத்தின் உண்மை நிலையிலிருந்து பெறப்படுகின்ற கீழ்ப்படிதலுள்ள செய்கையைக் குறித்த தெளிவான போதனை எதற்கும் நாம் பயப்படாமலும் அவற்றைத் தவிர்க்காமலும் இருப்போமாக.*

*விசுவாசித்தல், மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் என்ற எளிய செயல்களைத் தேவன் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கியுள்ளார். அவர் இரத்தத்தின் மூலமாக இந்தச் செயல்களைப் பயனுள்ளவைகளாக்கி யுள்ளார், இவைகளில் எந்த ஒரு செயலும் இரத்தத்திலிருந்து பிரிந்த நிலையில் பயன்படுத்தப்பட முடியாது. இதை அவர் உண்மையில் நமது கர்த்தருடைய இரத்தத்தின் இரட்சிக்கும் வல்லமையிலிருந்து எவ்வகை யிலும் விலகாத வண்ணம் செய்திருக்கின்றார் என்றால், இதே செயலை அவர், ஒருவர் தம் இருதயத்தில் உள்ள விசுவாசத்தின் வெளிப்பாடாகத் தண்ணீரில் மூழ்குதல் என்ற எளிய செயலின் மூலமாகவும் செய்ய முடியுமல்லவா? இரத்தத்தின் வல்லமையைச் சிறிதும் குறைக்காமல் அவர் விசுவாசம், மனந்திரும்புதல், மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவத்தை இணைக்க முடியுமென்றால், ஞானஸ்நானத்தைக் குறித்தும் அவர் இதே விஷயத்தைச் செய்ய முடியுமே. அவருடைய சித்தத்தை அறிகின்றவர்களே இதை உண்மையாய்ப் புரிந்து கொள்ள இயலும்.*

*நமது கருத்துக்கள் மற்றும் முன் தீர்மானமான எண்ணங்கள் எல்லாம் அகன்று போக வேண்டும்! நமது பிரிவினையின் ஆவி மற்றும் ஒரு குறிப்பிட்ட குழுவினரின் ஆர்வத்தின்படியாக ஆவியானவர் என்ன கூறியிருக்க வேண்டும் என்பவைகள் யாவும் அகன்று போக வேண்டும். இவைகளுக்குச் சத்தியத்திடம் வேலையொன்றுமில்லை. தேவன் கூறியுள்ளது என்ன? மற்றும் அவர் அர்த்தப்படுத்துகின்றது என்ன என்பது பற்றி மட்டும் நாம் எளிய முறையில் கேட்போம்.*

*நமது முந்திய பாடத்தில் நாம், பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு ஆற்றிய உரை பற்றிய, புகழ் பெற்ற மூன்று கல்வியாளர்களின் விளக்கங்களைப் பற்றிச் சிந்தித்தோம். இம்மூன்று கல்வியாளர்களும் கூட, பாவமன்னிப்பைப் பெற மனந்திரும்புதலும் ஞானஸ்நானமும் தேவை என்று பேதுரு பிரசங்கித்தார் என்றும், தேவன் பேதுருவுக்குள் இருந்த தம்முடைய பரிசுத்த ஆவியானவரால், அம்மக்கள் பாவமன்னிப்புப் பெறுவதற்கு ஞானஸ்நானம் பெற வேண்டும் என்றே உண்மையில் போதித்தார் என்றும் ஒப்புக் கொள்கின்றனர். பேதுருவின் மொழி நடையிலிருந்த மிகத் தெளிவான மற்றும் இயல்பான அர்த்தத்தைக் கல்வியாளர் எவரும் மறுக்க மாட்டார் என்றே நான் யூகிக்கின்றேன். நான் கூற முடிவதெல்லாம், பராமரிப்பதற்கென்று ஒரு கொள்கையை அல்லது ஆதரிப்பதற்கென்று ஒரு குழுவைக் கொண்டுள்ளவர்கள் மட்டுமே தெளிவான இந்த அர்த்தத்தை மறுதலிப்பார்கள் என்பதேயாகும்.*

*முன்பே நான் மேற்கோள் காண்பித்துள்ள, புகழ் பெற்ற பேப்திஸ்துக் கல்வியாளரான ஜேம்ஸ் W. வில்மர்த் என்பவர் பின்வருமாறு கூறினார்:*

> *கேம்ப்பெல்லிஸத்தைப் பொறுத்தமட்டில், அந்தப் பேயுருவானது பல நல்ல மனிதர்களை வேட்டையாடி, மோசமான விளக்கத்தை நன்கு கையாண்டு அவர்களைப் பயமுறுத்துகின்றது, ஒரு தவறான மொழிபெயர்ப்பைப் பராமரிப்பதாலும் கேம்ப்பெல்லைட்டுகளை உண்மையில் தேறினவர்கள் என்று அனுமதிப்பதாலும், உலகக் கல்வித்துவமானது அவர்கள் பக்கமாய் நமக்கெதிராய் இருப்பதை அனுமதிப்பதாலும் நாம் எதையாவது ஆதாயப்படுத்துவோமா?[1]*

*சத்தியத்தை நேசிப்பவர்கள் எல்லாரும், திருவாளர் வில்மர்த் போன்ற மனிதர்கள் எந்தப் பிரிவினைவாதத்துக்கும் மேலாக கல்வித்துவத்தையும் சத்தியத்தையும் மதிக்கின்ற பொழுது அகம் மகிழ வேண்டும். பிரிவினைவாத ஆவியில் இருந்த போதிலும், இப்படிப்பட்ட மனிதர்கள் தேவ வசனத்திற்கு உண்மையான விளக்கம் கொடுக்குமளவுக்குப் பெருந்தன்மையுடைய வர்களாய் இருக்கின்றனர் ...*

*மனம் குத்தப்பட்ட பாவிகள் தங்களின் பாவங்கள் துடைத்தெறியப் படுவதற்கு ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பேதுரு போதித்தார். ஒருவர் கிறிஸ்தவராயிருந்து - கிறிஸ்தவராக மட்டுமிருந்து - இந்த உபதேசத்தை விசுவாசிக்கலாம் என்றே நான் உறுதியாய் நினைக்கின்றேன்; ஏனெனில் பேதுரு ஒரு கிறிஸ்தவராக - கிறிஸ்தவராக மட்டுமே - இருந்தார், மற்றும் அவர் இதை விசுவாசித்துப் போதித்தார். ஏதாவதொரு குழுவோ*

*அல்லது போதகரோ நாமகரணமற்ற இந்தப் போதனையை அங்கீகரிக்கையில் நான் மகிழ்வடைகின்றேன். இப்படிப்பட்ட போதனையானது இந்த இடத்தில், கிறிஸ்தவர்களாக மட்டும் இருக்க முயற்சி செய்கின்ற மற்றும் எந்த நாமகரணக் கூட்டத்தையும் சாராத ஆனால், தாங்கள் இரட்சிக்கப் படும் பொழுது கர்த்தரால் தேவனுடைய சபையில் சேர்க்கப்படுகின்றவர்களின் வேதாகம போதனைகளுக்கு மனப்பூர்வமாய் ஒத்துப் போகின்றது. நேர்மையான எல்லா இருதயங்களும் தங்களின் போதனைகள் யாவற்றிலும் நாமகரணத்துவமின்றி இருப்பதைக் காண்பதற்கு நான் எவ்வளவாய் மகிழ்ச்சி அடைவேன்! கிறிஸ்துவை உண்மையுடன் விசுவாசிப்பவர் எவரும் முழுக்காட்டுதல் பற்றிய தெளிவான விளக்கத்தை ஏற்று ஞானஸ்நானம் பற்றிப் போதித்தால், அவர் உலகில் உள்ள நாமகரணமற்ற கிறிஸ்தவர் ஒவ்வொருவருடனும் "ஒரே இருதயமும் ஒரே மனமும்" உள்ளவராக இருக்கின்றார்.*

*"குழுக்களையும்," "பிரிவுகளையும்" மற்றும் நாமகரணத்தையும் விட்டுக் கொடுத்து, கிறிஸ்தவர்களாக மட்டும் இருப்பதற்கு நாம் உண்மையாகவே தயாராயிருக்கின்றோமா? தேவனுடைய பிள்ளைகள் எல்லாரையும் ஒன்றாக்க நம்மால் செய்ய முடிந்த எல்லாவற்றையும் செய்ய நாம் தயாராக இருக்கின்றோமா? நாமகரணத்துவமற்ற பிரசங்கியாராக இருப்பதற்கு ஒருவர், பாவமன்னிப்புக்கு அல்லது பாவமன்னிப்புப் பெறுவதற்குப் பேதுரு ஞானஸ்நானத்தைக் கட்டளையிட்டார் என்று பிரசங்கிக்க வேண்டும் என்பதை நினைவில் வையுங்கள். அவ்வாறு போதிப்பதில், அவர் மனிதருடைய உபதேசத்தையல்ல, ஆனால் கிறிஸ்துவின் உபதேசத்தையே ஆதரிக்கின்றார். இந்த உபதேசத்தை கிறிஸ்துவினுடையதல்லாத உபதேசம் என்கின்ற எவரொருவரும் கிறிஸ்துவையும் அவரது உபதேசத்தையும் தவறாய்க் குறிக்கின்றார். கிறிஸ்து தம் சொந்த இரத்தத்தினால் இந்த உபதேசத்திற்கு வண்ணம் தீட்டியுள்ளார்; ஆகையால் இது அவருடையதாயுள்ளது, மற்றும் இதிலிருந்து வருகின்ற எல்லாக் கனமும் அவருக்குரியதேயாகும்!*

---

*குறிப்பு*

[1]James W. Willmarth, in *Baptist Quarterly* (July 1877): 304-05. See Editor's note.